மீது அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கத் தயாராயிருக்க வேண்டும்.

இன்று தொழிலாளர்கள் ஒரு வேலைநிறுத்தம் செய்வதற்கான முயற்சிகளைச் செய்தார்கள் என்ற ஓரே காரணத்திற்காகத் தொழிற்சாலைக்கு உள்ளேயே போலீஸ் அனுப்பப்பட்டு தொழிற்சாலைக்குள்ளேயே அவர்களைக் கைது செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, எங்கே கோளாறு முயற்சிகளைச் செய்ய வேண்டும். இன்று மற்ற மாநிலங்களை விட பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஏன் நம் மாநிலத்தில்தான் அதிகப்படியாக உழைப்புச் சக்தி சேதப் இப்படி ஏற்பட்டுள்ளது? முதலாளிகள் காரணமாக இருக்கலாம் அல்லது தொழிலாளர்கள் காரணமாக இருக்கலாம, அல்லது இரண்டு பேருமே காரணமாக இருக்கலாம், அதல்லாமல் அரசியல் காரணங்களும் இருக்கலாம். யார் காரணம் என்று சரிவர ஆராயப்பட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இப்போது நெசவுத் தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்பட்டதற்குப் பின்னால் அவர்களைச் சிறையில் வைத்திருக்க வேண்டுமென்பதோ அல்லது ஒரு பஸ் எறிந்து விட்டது என்பதால் அவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்றோ அல்லது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியமோ இல்லை என்று கூறி கைது செய்யப்பட்டுள்ள அல்லது வழக்கு தொடரப்பட்டுள்ள எல்லா நெசவுத் தொழிலாளர்களையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வருகிற நாலை முறையாக விநியோகம் செய்வதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் குறித்து.

Mr. DEPUTY SPEAKER : I have to make an announcement to the House. On further consideration in the light of the points of order raised in the House to-day, and in consideration of the established practice, under Rule 62 of the Tamil Nadu Legislative Assembly Rules, I revise the previous order, and allot to Thiru K. A. Mathialagan, Seat No. 135 in Block No. IV.